# கரூர் நகர்மன்றம்

| வ.எண் | பெயர் | பதவி | வார்டு எண். |
|---|---|---|---|
| 1 | திருமதி.கே.எம்.சுதா | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் | 1 முதல் 48 வரை |

# குழுக்கள்

| நியமனக்குழு | |
|---|---|
| திருமதி.கே.எம்.சுதா | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |

| வரிமேல்முறையீட்டுக்குழு | |
|---|---|
| திருமதி.கே.எம்.சுதா | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |

| ஒப்பந்தக் குழு | |
|---|---|
| திருமதி.கே.எம்.சுதா | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |

# கரூர் நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2020 - 2021

| | | |
|---|---|---|
| திருமதி.கே.எம்.சுதா | ஆணையர் | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய |
| திருமதி.கே.எம்.சுதா | தனி அலுவலர் | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய |
| திரு.ஐ.நக்கீரன் | நகராட்சி பொறியாளர் | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய |
| திரு.து.அன்பு | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய |
| திருமதி.கோ.ஸ்ரீப்ரியா | நகர்நல அலுவலர் | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய |
| திரு.என்.சுரேஷ் | மேலாளர் (பொ) | 01.04.2020 முதல் 28.08.2020 முடிய |
| திரு.க.ஜெயகுருநாதன் | கணக்கர் மற்றும் மேலாளர் (பொ) | 01.09.2020 முதல் 21.10.2020 முடிய |
| திரு.கோ.பழனி | மேலாளர் | 22.10.2020 முதல் 25.03.2021 முடிய |
| திரு.வெ.பாஸ்கரன் | வருவாய் அலுவலர் மற்றும் மேலாளர் (பொ) | 26.03.2021 முதல் 31.03.2021 முடிய |
| திரு.வெ.பாஸ்கரன் | வருவாய் அலுவலர் | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய |

# கரூர் நகராட்சி
# நிர்வாக அறிக்கை – 2020 - 2021
## அமைப்பும் – ஆட்சியும்
## ஆட்சி எல்லை

அமராவதி ஆற்றின் இருமருங்கிலும் அமைந்துள்ள இந்நகர் 1874ம் வருடம் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு 24.10.1969ம் தேதி முதல் 08.05.1983ம் தேதி வரை முதல்நிலை நகராட்சியாக இருந்து அதன் பிறகு அரசு ஊரக வளர்ச்சி – உள்ளாட்சித் துறையின் 09.05.1983ம் தேதி எம்.எஸ்.எண்.651 அரசு ஆணையின்படி இந்நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு அதன்பின் அரசாணை எண்.526, நாள்.27.04.1988ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக 24.05.1988 முதல் தரம் உயர்த்தி 25.10.2011 வரை தொடர்ந்து நடந்து வந்தது. இதன் எல்லைக்குள் கரூர், இனாம் கரூர் வருவாய் கிராமமும், சணப்பிரட்டி, லட்சுமி நாராயண சமுத்திரம், பாலம்பாள்புரம், திருமாநிலையூர் மற்றும் தாந்தோணி கிராமங்கள் அடங்கியிருந்தன.

பழைய கரூர் நகராட்சியின் பரப்பு 6.03 சதுர கிலோ மீட்டர்களாகவும், 1991ம் ஆண்டின் குடிக்கணக்குப்படி நகரின் மொத்த மக்கள் தொகை 73418 ஆகவும் இருந்தது. 2001ம் ஆண்டு மக்கட்தொகை கணக்குப்படி மொத்த மக்கள் தொகை 76,328 ஆகவும் இருந்தது. 1995 முடிய 32 வார்டுகளாக பிரிக்கப்பட்டிருந்த நகராட்சி எல்லைகள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.62, நாள்.22.03.1995ன்படி வார்டுகளின் எண்ணிக்கை 36 ஆக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

2010ம் ஆண்டு கரூர் நகர்மன்ற தீர்மானம் எண்.329, நாள்.13.09.2010ன்படி கரூர் நகராட்சியை ஒட்டியுள்ள சணப்பிரட்டி ஊராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் இனாம் கரூர் நகராட்சி ஆகியவனவற்றை கரூர் நகராட்சியுடன் இணைக்க அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில் அரசாணை எண்.279 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.09.11.2010ன்படி, மேற்படி உள்ளாட்சிகளை இணைத்து உத்தரவிட்டது. அது விபரம் அனைத்தும் தமிழ்நாடு மாநில அரசிதழில் Part II section 2, நாள்.09.11.2010ல் பிரசுரமாகியுள்ளது. பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறாததால், அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.14.01.2011ல் மேற்படி உள்ளாட்சிகள் கரூர் நகராட்சியுடன் இணைக்கவும், வரும் உள்ளாட்சி சாதாரண தேர்தலில் போது தேர்தல் நடத்தப்படும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அரசிதழில் Part II section 2, நாள்.14.01.2011ல் பிரசுரம் செய்யப்பட்டது.

உள்ளாட்சிகளின் இணைப்புக்கு பின்பாக கரூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 53.26 சதுர கிலோ மீட்டராகும். 2001ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பு 1,68,448 ஆகவும் உள்ளது. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை 2,14,283 ஆக உள்ளது. அரசாணை எண்.90, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.28.06.2011ல் விரிவாக்கம் செய்யப்பட்ட நகராட்சியை 48 வார்டுகளாக பிரிவினை செய்திட அரசு உத்தரவு பிறப்பித்து, பழைய வார்டுகளின் எல்லைகளை மாறுதல் செய்யா வகையில் 3 நகராட்சிகள் மற்றும் 1 கிராம ஊராட்சியை இணைத்து 48 வார்டுகள் பிரிக்கப்பட்டு, அதற்கான எல்லைகளை அரசாணை எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.08.09.2011ல் நிர்ணயம் செய்து அங்கீகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 28 வார்டுகள் பொது வார்டுகளாகவும், 16 வார்டுகள் பெண்களுக்கும், 4 வார்டுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 48 நகர்மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல் 19.10.2011ல் நடைபெற்றது.

<u>தேர்தல்:</u>

அறிக்கை ஆண்டில் தேர்தல் ஏதும் நடைபெறவில்லை.

<u>கூட்டங்கள்:</u>

அறிக்கை ஆண்டில் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் மற்றும் தேவை ஏற்படும் காலங்களில் அவசரக்கூட்டங்களும் நடைபெற்றன. அறிக்கையாண்டில் சாதாரண கூட்டம் 11 முறை கூடி 461 பொருட்கள் மற்றும் அவசரக் கூட்டம் 14 முறை கூடி 291 பொருட்கள் முடிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 3வது அட்டவணை வகையில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி மன்றக்கூட்டங்கள் நடைபெற்றது.

<u>குழுக்கள்:</u>

சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் 13–ன்படி நியமனக்குழுவும், 68 பிரிவு 1–ன்படி மேல் முறையீட்டுக் குழுவும், ஒப்பந்தக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் தொடர்ந்து செயலாற்றி வந்தன.

<u>நிர்வாகம்:</u>

நிர்வாக மேலாண்மைக்கும் ஒருங்கிணைந்த கரூர் நகராட்சிக்கு 25.10.2011 முதல் கீழ்க்கண்டவாறு பணியாளர்களை கொண்டு நிர்வாகம் செய்யப்படுகிறது. பணியாளர்களுக்கும் ஆன செலவு நகராட்சியில் இருந்தும், ஆணையர் அவர்களின் சம்பளம், அகவிலைப்படி, அரசாங்க நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது.

| பெயர் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| மேலாளர் | 1 | – |
| கணக்கர் | 1 | – |
| உதவியாளர் | 7 | 3 |
| இளநிலை உதவியாளர் | 27 | 3 |
| தட்டச்சர் | 2 | – |
| பதிவறை எழுத்தர் | 7 | – |
| அலுவலக உதவியாளர் | 14 | 5 |
| இரவு காவலர் | 1 | – |
| சுருக்கெழுத்தர் | 1 | 1 |

அரசு ஆணை நிலை எண்.**29** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.**13.02.2013**ன்படி இனாம்கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பணியாளர்கள் கரூர் நகராட்சி பணியாளர்களாக ஈர்க்கப்பட்டுள்ளனர்.

நகராட்சி நிர்வாகம் கணினி மயமாக்கப்பட்டு **01.04.1997** முதல் வசூல் பணி உள்பட அனைத்துப் பணிகளும் கணினி பணியாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

| பணியிடம் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| உதவி கணினித் திட்ட அமைப்பாளர் | 1 | – |
| புள்ளி விபரக்குறிப்பாளர் | 3 | 3 |

## பொறியியல் பிரிவு

**பணியாளர்கள் :**

கரூர் நகராட்சியில் **25.10.2011** முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணிமலை நகராட்சி, மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பணிகளை கரூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை கொண்டு ஒருங்கிணைந்த நகராட்சி பகுதிகளுக்கு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. அரசு ஆணை நிலை எண்.**29**, நகராட்சி நிர்வாக மண்டல குடிநீர் வழங்கு துறை நாள்.**13.02.2013**ன்படி இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பணியாளர்கள் கரூர் நகராட்சி பணியாளர்களாக ஈர்க்கப்பட்டுள்ளனர்.

## <u>பொறியர் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட பொதுப்பணி அலுவலர்கள் பின்வருமாறு</u>

| பணியின் பெயர் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| நகராட்சி பொறியர் | 1 | – |
| பொதுப்பணி மேற்பார்வையாளர் | 2 | – |
| பொதுப்பணி லாரி ஓட்டுநர் | 1 | – |
| ஈப்பு ஓட்டுநர் | 1 | – |
| பொதுப்பணி உதவிப் பொறியர் | 2 | – |
| பணி ஆய்வர் | 2 | 1 |
| வரைவாளர் | 1 | – |
| தங்கும் விடுதி காவலர் | 1 | – |
| சாலை பணியாளர் | 2 | – |

## <u>தெருவிளக்கு பராமரிப்பு</u>

| பணியின் பெயர் | பணி இடம் | காலி பணியிடம் |
|---|---|---|
| மின் கம்பியாளர் | 6 | 2 |
| தெருவிளக்கு மின்கம்பி உதவியாளர் | 5 | 1 |
| மினி லாரி ஓட்டுனர் (ஏணி லாரி) | 1 | – |

தெரு விளக்கு மற்றும் பாதாள சாக்கடை பணிக்கான போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் வெளிநபர்களை ஒப்பந்த முறையில் (Outsourcing) தருவித்து பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## <u>கட்டிடங்கள்</u>

| | |
|---|---|
| பள்ளி கட்டிடங்கள் | 11 |
| சுகாதார வளாக கட்டிடங்கள் | 44 |
| சத்துணவு மைய கட்டிடங்கள் | 28 + 11 (பள்ளி சத்துணவு மையங்கள்) |
| சமுதாயக் கட்டிடங்கள் | 3 |
| அலுவலக கட்டிடங்கள் | 4 |
| பல்நோக்கு அங்காடி | 1 |

## சாலைகள்

கரூர் நகராட்சி, இனாம் கரூர், தாந்தோன்றிமலை பகுதி மற்றும் சணப்பிரட்டி உள்பட எல்லைக்குள் இருக்கும் சாலைகளை நெடுஞ்சாலைகள், பிற சாலைகள் என இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. நெடுஞ்சாலையின் நீளம் சுமார் **68.862** கிலோ மீட்டர் ஆகும். இதை நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. மாநில நெடுஞ்சாலை – **46.672 கி.மீ**
2. தேசிய நெடுஞ்சாலை – **22.190 கி.மீ**

**மொத்தம் – 68.862 கி.மீ.**

அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த சாலையின் நீளம் **330.393** கி.மீ. **25.10.2011** முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோன்றிமலை நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு மேற்கண்ட பகுதிகளின் சாலைகளை கரூர் நகராட்சி எடுத்து பராமரிப்பு செய்து வருகிறது.

| | | **மொத்த நீளம்** |
|---|---|---|
| 1 | தார் சாலைகள் | 221.380 |
| 2 | மண் சாலைகள் | 62.989 |
| 3 | சிமெண்ட் சாலைகள் | 46.024 |
| | **மொத்தம்** | **330.393** |

## பாலங்கள்

கரூர் நகரத்தையும், பசுபதிபாளையத்தையும் இணைக்க அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு முழ்குபாலமும் கட்டி **14.02.1963** அன்று திறந்து வைக்கப்பட்டது. பாலத்தின் நீளம் **740** அடி, அகலம் **24** அடி, **33** கண்களை உடையது. புதிய மேம்பாலம் கட்டுவதற்காக அரசாணை எண்.**185**, நாள்.**02.12.2011**ன்படி நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு **(**கோப்பு எண்.எப்**1/5169/08).** புதிய பாலம் பணி முடிவுபெற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

மேலும் லைட்ஹவுஸ் பகுதியையும், திருமாநிலையூர் பகுதியையும் இணைக்கும் வகையில் அமராவதி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அரசு கடிதம் **31630**/எம்.ஏ**3/94.2** கிர்லோஸ்கர் **கன்ஸ்ல்டன்ட்** மூலம் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு **11.02.2000** அன்று அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டி இயக்க மாற்றுதல் திட்டத்தின்கீழ் கட்டி முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. அமராவதி ஆற்றில் குறுக்கே கட்டப்பட்ட புதிய பாலத்தின் காரணமாக கரூர் நகரில் போக்குவரத்து நெரிசல் கணிசமாகக் குறைந்துள்ளது.

தொழிற்சாலைகளுக்கும், அலுவலகத்திற்குச் செல்வோருக்கும், பள்ளிக்குச் செல்வோரும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி அவதிப்படும் நிலை முற்றிலும்

தவிர்க்கப்பட்டுள்ளது. பாலம் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிற்கு அரசாணை எண்.65 மற்றும் 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.19.12.2005ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது சுங்க கட்டணம் வசூலிக்கப்படவில்லை. இந்த புதிய பாலமானது பொதுவாக அனைத்து மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## பொறிகளும் கருவிகளும்

கரூர் நகராட்சியில் 25.10.2011 முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோன்றிமலை நகராட்சி, மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. குடிதண்ணீர் வழங்க நகராட்சிக்கு சொந்தமான ஒரு குடிநீர் லாரி மூன்றும் சாலை வேலைகளுக்கு மற்றும் பொதுசுகாதாரப் பணிகளுக்கு இரண்டு எண்ணிக்கை மினி லாரியும் இருக்கின்றன. தண்ணீர் குறைவாக உள்ள இடங்களுக்கு 6000 லிட்டர் கொண்ட குடிநீர் லாரிகள் மூலமாக நாள்தோறும் வழங்கப்படுகிறது. நகராட்சி பகுதிகளில் உயரமான கம்பத்தில் உள்ள தெரு விளக்குகள் சீர் செய்ய அலுமினிய ஏணியுடன் கூடிய மினி லாரி ஒன்று உள்ளது. மேலும் நிதியாண்டில் புதியதாக தானியாங்கி உயர்த்தி ஏணி கொண்ட வாகனம் ஒன்று வாங்கப்பட்டு பிரதான சாலைகளில் உள்ள மையத்தடுப்பாணை உயரமான கம்பங்களில் மாட்டுவதற்கு பயன்பாட்டில் உள்ளது. நடமாடும் நீர் கசிவு கண்டுபிடிப்பு வாகனம் ஒன்றும், பாதாள சாக்கடை அடைப்புகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய பாதாள சாக்கடை சரி செய்யும் வாகனம் இரண்டும் உள்ளது. மேலும் பாதாள சாக்கடை அடைப்பின் நீக்க மூன்று சக்கர ஆட்டோ இரண்டு எண்ணிக்கை உள்ளது.

| S.No. | Vehicle No. | Name of the Vehicle | Year of Purchasing |
|---|---|---|---|
| 1 | TN47 U 5179 | Jet Rod Lorry | 04.03.2010 |
| 2 | TN47 U 4468 | Jet Rod Lorry | 17.02.2010 |
| 3 | TN47 W 2331 | Tata Ace | 04.03.2011 |
| 4 | TN47 D 6542 | Water Lorry | 22.07.1998 |
| 5 | TN47 F 2910 | Jeep (Condemed) | 14.03.2000 |
| 6 | TN47 S 0070 | Jeep | 22.01.2008 |
| 7 | TN47 F 1521 | Street light lorry | 27.01.2000 |
| 8 | TNX 4491 | Street light lader mini lorry | 02.04.1983 |
| 9 | TN47 M 5103 | Jeep (Condemed) | 20.07.2005 |
| 10 | TN47 V 8186 | De – Silting Auto | 21.12.2010 |
| 11 | TN47 V 5436 | De – Silting Auto | 20.10.2010 |
| 12 | TN47 T 8386 | Bus water leakage (Tax Collection) | 02.09.2009 |

| | | | |
|---|---|---|---|
| 13 | TN47 M 5135 | Jeep (Condemed) | 21.07.2005 |
| 14 | TN47 S 9329 | Bolerio | 18.11.2008 |
| 15 | TN47 R 9884 | Auto (Health Section) | 14.01.2008 |
| 16 | TN47 AB 7476 | Scorpio | 06.06.2012 |
| 17 | TN47 AC 0324 | JCB (Health Section) | 01.08.2012 |
| 18 | TN47 AF 2941 | (Street light) AshokLeyland SKY LIFT LADDER | 22.09.2014 |
| 19 | TN47 AH 6364 | Scorpio | 10.02.2016 |
| 20 | TN 47 AJ 8690 | Mahandra | 2017 |
| 21 | Excavitor | HYNDAI | 2017 |
| 22 | Open body Tipper | Ashok Leyland | 2017 |
| 23 | Open body Tipper | Ashok Leyland | 2017 |
| 24 | Open body Tipper | Ashok Leyland | 2017 |
| 25 | TN 47 AK 0499 | Ashok Leyland | 27.09.2017 |
| 26 | TN 47 AK 0520 | Ashok Leyland | 27.09.2017 |
| 27 | TN 47 AK 0504 | Ashok Leyland | 27.09.2017 |

## விளக்கு வசதிகள்

## தெரு விளக்குகள்

இந்நகராட்சிக்குட்பட்ட **48** வார்டுகளிலும் மொத்தம் **9650** எண்ணிக்கை தெருவிளக்குகள் பொது மக்கள் நலனுக்காக உள்ளன. இதில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் நிவர்த்திக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| குழல் விளக்குகள் | 40 வாட்ஸ் | 5370 |
| மெட்டல் ஹாலய்டு விளக்குகள் | 150 வாட்ஸ் +400 வாட்ஸ் | 216 |
| CFL விளக்குகள் | 1 x 36வாட்ஸ் | 2202 |
| சோடியம் ஆவி விளக்குகள் | 70 x 150 & 250 வாட்ஸ் | 1025 |
| உயர்மின் கோபுர விளக்குகள் | (2 x 400 வாட்ஸ்) 1 Luminaries | 204 |
| T5 விளக்குகள் | 41x 24வாட்ஸ் | 304 |
| **மொத்தம்** | | **9321** |
| தெரு விளக்கு மின் இணைப்புகள் | | 708 |

## பாதாள சாக்கடை வசதிகள்

இந்நகராட்சிக்குட்பட்ட கரூர் நகரம் இனாம்கரூர் பகுதியில் வார்டு எண்.1 முதல் 32 வரையுள்ள பிரதான சாலைகளில் பாதாள சாக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மக்கள் பாதை மற்றும் பசுபதிபாளையம், பாலம்மாள்புரம் நீருந்து நிலையங்களில் உள்ள விசை மோட்டார் மூலம் கழிவுநீரானது அரசு காலனியில் 15MLD கொள்ளளவில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

## ஆரம்ப கல்வி

01.04.1990 முதல் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகப் பொறுப்பு நகராட்சியில் இருந்து அரசு கல்வித்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. அரசிடமிருந்து ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக் கட்டிட பராமரிப்பு பணிகள் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பாலர் பள்ளி சத்துணவு மையங்கள்

இம்மையங்களின் செயல்பாடுகள் அனைத்தும் 2004ம் ஆண்டு முதல் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் (ICDS) இணைக்கப்பட்டுவிட்டது. பராமரிப்பு பணிகள் நகராட்சியால் செய்யப்பட்டு வருகின்றன.

## பள்ளி சத்துணவு மையங்கள்

இந்நகராட்சியில் 4 ஆரம்ப பள்ளிகளும், 4 நடுநிலைப்பள்ளிகளும், இரண்டு உயர்நிலைப்பள்ளி மற்றும் இரண்டு மேல்நிலை பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் தினமும் 5 வயது முதல் 9 வயது வரை 328 சிறுவர் சிறுமியரும் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயனடைந்து வருகிறார்கள்.

| | |
|---|---|
| ஆரம்பபள்ளி | 98 |
| நடுநிலைப்பள்ளி | 230 |
| உயர்நிலைப்பள்ளி | 220 |
| நகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 150 |
| நகராட்சி மேல்நிலைப்பள்ளி | 224 |
| | 922 |

ஒரு உயர்நிலைப் பள்ளியில் 220 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்த ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 3 அமைப்பாளர்களும், 11 உதவியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 3 அமைப்பாளர்களும் 6 உதவியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். பள்ளிச் சத்துணவு மையங்களில் செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் அரசு மானியம் வரப்பெறவில்லை. நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களில் வாரத்திற்கு ஐந்து முட்டைகள் உணவு உண்ணும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் – 4, நகராட்சி மேல்நிலைப்பள்ளிகள் – 2 மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளி – 2 ஆகியவற்றில் அரசு ஆணைப்படி எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## பொதுசுகாதாரம்

### மருத்துவம்

நகரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை–1, நகர்மன்ற சித்த மருத்துவமனை– 1, நகராட்சி கஸ்துரிபாய் மகப்பேறு மருத்துவமனை –1 ஆக மூன்று பொது மருத்துவமனைகள் உள்ளன. நகர ஆரம்ப சுகாதார நிலையம் பசுபதிபாளையம், தாந்தோணி , இனாம் கரூர் பகுதிகளில் இயங்கி வருகிறது.

சித்த மருத்துவமனைக்கு நிலவேம்பு குடிநீர் பவுடர் ரூ.99,540/–க்கு வாங்கப்பட்டது. நிலவேம்பு குடிநீர் 652948 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி கஸ்தூரிபாய் தாய்–சேய் நல விடுதியில் 2020–2021ம் வருடத்தில் பெண்கள்–31052, ஆண்கள் – 25247 நபர்களுக்கும், ஆண் குழந்தைகள்கள் – 3917, பெண் குழந்தைகள்–4273, பிரசவம்–65 நபர்களுக்கும், உள்நோயாளிகள்–1186 நபர்கள் மொத்தம் 64375 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

### பிறப்பு விகிதமும், மகப்பேறு உதவியும்

இவ்வாண்டில் பதிவான மொத்தப் பிறப்புகள் 4696 சென்ற ஆண்டில் 4784 பிறப்புகள். மக்கள் தொகை கணக்குப்படி நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் பிறப்பு விகிதம் அறிக்கையாண்டில் 43.87%. சென்ற ஆண்டு 44.56%. இவ்வாண்டில் இறப்பு பதிவானது மொத்தம் 1618. இறந்து பிறந்தது 6. இந்நகர் பத்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பத்து துப்புரவு ஆய்வாளர்கள் பெரிய குளத்துப்பாளையம், வெங்கமேடு வாட்டர் டேங் அலுவலகம், மக்கள்

பாதை கோட்டம், பசுபதிபாளையம் கோட்டம், வடக்கு காந்திகிராமம் கோட்டம், தாந்தோணி கோட்ட அலுவலகம் ஆகிய பகுதிகளிலும் பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட் அருகில் உள்ள துப்புரவு கோட்ட அலுவலகங்களில் மேற்கூறிய பகுதிகளில் நிகழும் பிறப்பு இறப்புகளை பதிவு செய்கின்றனர்.

இந்நகராட்சியில் பயிற்சி பெற்ற இரண்டு மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் ஒன்று மகப்பேறு ஆயாக்கள் பணியாற்றி வருகிறார்கள். கஸ்தூரிபாய் தாய் சேய் நலவிடுதி நகராட்சியால் தொடர்ந்து இந்த விடுதியில் 11 படுக்கை வசதி உண்டு. நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் மின் விளக்குகள், விசிறிகள், குடிநீர் குழாய்களுடன் உள்ளது.

| | **2020–2021** |
|---|---|
| No.of Antenatal cases registered | **529** |
| No.of Antenatal cases visit | **529** |
| No.of Postnatal visit | **3535** |
| No.of Postnatal cases registered | **505** |
| No.of Infants visits | **3514** |
| No.of Antenatal clinic held | **52** |
| No.of Immunisation clinic held | **318** |
| No.of Family Planning cases canvassed | **505** |
| No.of Pre-School children registered | **4069** |
| No.of Infant Death reported | **5** |
| No.of Deliveries | **505** |
| No.of Still births | **2** |

## <u>தடுப்பூசித் திட்டம்</u>

இத்திட்டத்தின்கீழ் நிர்ணயித்த இலக்கு, சாதனை, சாதனையின் சதவீதம் விபரம் வருமாறு:

| வ.எண். | தடுப்பூசி பெயர் | இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பெண்டாவேலன்ட், ஊசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 528 | 599 | 100% |
| 2 | போலியோ ஊசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 528 | 599 | 100% |
| 3 | தட்டம்மை தடுப்பூசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 528 | 528 | 100% |
| 4 | காசநோய் தடுப்பூசி கொடுக்கப்பட்ட ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 528 | 503 | 100% |
| 5 | DPT – II nd Booster தடுப்பூசி கொடுக்கப்பட்ட | 711 | 627 | 100% |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | | | |
| 6 | இரன ஜன்னி தடுப்பூசி அளிக்கப்பட்ட கர்ப்பிணி பெண்கள் | 529 | 529 | 100% |
| 7 | இரன ஜன்னி தடுப்பூசி அளிக்கப்பட்ட 10 வயதுக்குட்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | 1132 | 224 | 67% |
| 8 | இரன ஜன்னி தடுப்பூசி அளிக்கப்பட்ட 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | 1031 | 286 | 78% |
| 9 | இரும்பு சத்து மாத்திரை அளிக்கப்பட்ட தாய்மார்கள் | 529 | 529 | 100% |
| 10 | இரும்பு சத்து மாத்திரை அளிக்கப்பட்ட 3– 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் | 3795 | 3087 | – |
| 11 | வைட்டமின் "A" சல்யூஷன் அளிக்கப்பட்ட 1– 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள். | 5843 | 5745 | 100% |

## தாய் சேய் நல விடுதியில் உள்ள பணியாளர்கள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெண் மருத்துவ அலுவலர் | 1 | – |
| 2 | மகப்பேறு உதவியாளர்கள் | 5 | 2 |
| 3 | ஆயாக்கள் | 5 | 1 |
| 4 | இரவுக்காவலர் | 1 | – |

அறிக்கையாண்டில் குடும்ப நல திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்கு ஏற்படுத்திய இலக்கு 266 ஆகும். இதில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் 191 ஆகும்.

## இறப்பு விகிதமும், கொள்ளை நோய்கள்

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் பதிவான இறப்பு | 1486 |
| சென்ற ஆண்டு | 1375 |
| டைபாய்டு காய்ச்சல் | இல்லை |
| டெங்கு காய்ச்சல் | 12 |
| காச நோய் | இல்லை |

## மலேரியா, கொசுப்புழு ஒழிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மலேரியா துப்புரவு ஆய்வர் (பொறுப்பு–1) மற்றும் 8 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது இத்திட்டத்திற்கு அரசு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை.

அறிக்கையாண்டில் நகர்ப்பகுதியில் உள்ள கொசுப்புழு உற்பத்தியாக ஏதுவாக உள்ள சாக்கடைகள், வாய்க்கால், ஆற்றுப்பகுதியில் உள்ள நீர் தேங்கும் இடங்கள், பாறைக்குழிகள், சிமிண்ட் பைப் செய்யும் தொட்டிகள், வீடுகளில் சேமிப்பு வைத்திருக்கும் தொட்டிகள், கிணறுகள் ஆகியவற்றில் டெமிபாஸ் என்னும் மருந்தினை கொண்டு கொசுப்புழு உற்பத்தியை குறைக்கப்பட்டு வருகிறது. நகரில் சென்ற ஆண்டில் மலேரியா காய்ச்சலால் எவரும் பாதிக்கப்படவில்லை. தினசரி 9 வார்டுகள் வீதம் கையினால் அடிக்கக்கூடிய புகை இயந்திரத்தில் புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கரூர் நகராட்சியில் 48 வார்டுகளுக்கு 225 நபர்களை கொண்டு கொசுப்புழு ஒழிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியில் உள்ள 48 வார்டுகளின் அனைத்து குடியிருப்புகளும் ஆய்வு செய்யப்பட்டு கொசுப்புழு தடுப்பு மருந்து (டெமிபாஸ்) தெளிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் பொதுமக்கள் அனைவருக்கும் வீடுவீடாக சென்று துண்டு பிரசுரங்கள் வழங்கி டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. 15 புகைத்தெளிப்பான்கள், 25 சிறிய புகைத் தெளிப்பான்கள் மற்றும் 6 வாகன புகைத்தெளிப்பான் கொண்டு நாள் ஒன்றுக்கு 4 வார்டுகளில் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து வார்டு பகுதியிலும் கூட்டுத் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் நகரில் முக்கிய இடங்களில் பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் பஸ்நிலையம், நகராட்சி கஸ்தூரிபாய் தாய்சேய் நலவிடுதி, மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் நிலவேம்பு கசாயம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் கூட்டு துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டும், புகை மருந்தும் அடிக்கப்பட்டும் வருகிறது. நகராட்சி பகுதியில் காய்ச்சல் அறிகுறி கண்ட நபர்களின் வீடுகளில் தகவல் பெற்ற அன்றே வீட்டில் புகைமருந்து தெளிக்கப்பட்டும், அருகில் வசிப்பவர்களது வீடுகளுக்கும் புகை மருந்து தெளித்தும், மேற்கண்ட பகுதிகளில் கொசுப்புழுக்களை கண்டறிந்து அவற்றினை அழித்தும் சுகாதார முறைகளை கடைபிடிக்க அறிவுரைகளும் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளில் அந்தந்தப்பகுதி சுய உதவிக்குழுக்களை கொண்டும் கொசுப்புழு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கரூர் நகராட்சி தெரு நாய் அறுவை சிகிச்சை

கரூர் நகராட்சிப்பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை அறுவை சிகிச்சை செய்ய ரூ.24.00 லட்சம் தமிழக அரசால் நிதி ஒதுக்கப்பட்டது. (G.O.No.10, Date.18.01.2007) மேற்படி தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் அறுவை சிகிச்சை அரங்கம், ஓய்வு அறை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்பு கவனிப்பு அறை ரூ.3.00 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அறுவை சிகிச்சை செய்ய Animal welfare Boardல் பதிவு பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் முறையாக ABC திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதழின் பேரில் சிறப்பாக அறுவை சிகிச்சை 711 ARV தடுப்பூசி போடப்பட்டு தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் நகரில் சுற்றிதிரியும் தெருநாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம் – துப்புரவு

கரூர் நகராட்சியில் 25.10.2011 முதல் இனாம் கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி இணைக்கப்பட்ட பின்பு அனைத்து பகுதிகளின் பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி துப்புரவு பணிகளை செய்வதற்காக உள்ள பணியாளர்கள் விபரம்.

| | | | காலிப்பணியிடம் |
|---|---|---|---|
| 1 | துப்புரவு – ஆய்வர்கள் | 10 | – |
| 2 | துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 17 | 4 |
| 3 | களப்பணி – உதவியாளர் | 1 | 1 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 406 | 191 |
| 5 | லாரி ஓட்டுனர்கள் | 16 | 5 |
| 6 | ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) | 623 | 201 |

குப்பை, கூளங்கள் அப்புறப்படுத்த கீழ்க்கண்ட வாகனங்கள் உபயோகப்படுத்தப்பட்டது.

## வாகனங்களின் விபரம்

| | |
|---|---|
| மூன்று சக்கர சைக்கிள் | 154 |
| தள்ளுவண்டிகள் | 73 |
| டிப்பர் லாரி | 8 |
| கழிவடை செய்யப்பட உள்ள லாரிகள் | 2 (இயங்காமல் உள்ளது) |
| டம்பர் பிளேசர் | 3 |
| டம்பர் பின்கள் | 231 |
| காம்பாக்டர் லாரிகள் | 2 |
| காம்பாக்டர் பின்கள் | 200 |

## வழங்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள்

| | |
|---|---|
| தலை கவசம் | 136 |
| முக கவசம் | 248 |
| ஒளிரும் சட்டை | 248 |
| கையுறை | 248 |
| கம்பூட் | 100 |
| மழைக்கோட் | 248 |
| புகைத்தெளிப்பான்கள் | 6 |
| கைத்தெளிப்பான்கள் | 24 |
| வாகனத்தில் பொருத்திய புகைத்தெளிப்பான் | 3 |

வீடுவீடாக குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரித்து மூன்று சக்கர பேட்டரி வாகனங்களில் சேகரித்து MCC மற்றும் கலவை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

## மழைநீர் வடிகால் கால்வாய்

இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு மழைநீர் வடிகால் கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. திறந்த வெளி மண் கால்வாய் – 14.50 கி.மீ.(கச்சர்)
2. திறந்த வெளி கட்டிட கால்வாய் – 257.65 கி.மீ. (பக்கர்)

## கலவை உரம்

கலவை உரம் தயாரிப்புப் பணிக்காக ஒரு துப்புரவு ஆய்வர், ஒரு துப்புரவுப்பணி மேற்பார்வையாளரும், மற்றும் 18 கலவை உர தொழிலாளர்களும், 4 காவலரும் பணிபுரிந்து வருகின்றனர். வாங்கல் சாலையில் உள்ள அரசு காலனிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 24.50 ஏக்கர் பரப்பளவில் தினசரி சேகரமாகும் 71 மெ.டன் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. 7.75 ஏக்கர் பரப்பளவில் உள்ள கலவை உரக்கிடங்கில் அணுகு சாலைகளை சிமெண்ட் தளம். அலுவலக அறை, தண்ணீர் வசதி, மின்வசதி, சேகரிப்பு கூடம் மற்றும் சுற்று சுவர் போன்ற பணிகள் ரூ.272.25லட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 7.5 ஏக்கர் பரப்பில் உள்ள கலவை உரக்கிடங்கின் ஒரு பகுதியை ரூ.3.5லட்சம் செலவில் சமன் செய்யப்பட்டுள்ளது. மேலும் திட்டம் 2015–2016ன்கீழ் ரூ.589.00லட்சத்தில் கலவை உரக்கிடங்கினை மேம்பாடு செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் தினசரி 5மெட்ரிக் டன் திறன் கொண்ட உயிரி எரிவாயு கலன் நிறுவப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. அதிலிருந்து உற்பத்தி ஆகும் எரிவாயு மூலம்

மின்னாக்கியினை இயக்கி உரக்கிடங்கில் உள்ள மின்விளக்குகளுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

## <u>அபாயகரமானதும் மற்றும் அச்ச அருவறுக்கத்தக்க தொழில்கள்:</u>

சிற்றுண்டி விடுதிகள் பலவகைப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் செவ்வனே நடைப்பெற உப சட்ட விதிகள் அமுல்படுத்தப்பட்டன. உரிமையாணை வேண்டப்பட்ட எல்லாத் தொழிற்சாலைகள் பார்வையிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியில் கண்ட கட்டுபாடுகள் செயலாற்றப்பட்டதா என பார்வையிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அறிக்கையாண்டில் **1631** உரிமையாணைகள் வழங்கப்பட்டது. இதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ.**20.20** லட்சம் ஆகும்.

## <u>குடிநீர் வழங்கல்</u>

ஒருங்கிணைக்கப்பட்ட கரூர் நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி, தாந்தோன்றிமலை நகராட்சி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளுக்கு நகரில் சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்காக உள்ள சிப்பந்திகள் விபரம் வருமாறு:

| அலுவல் / பணியாளர்கள் | பணியிடம் | காலியிடம் |
|---|---|---|
| உதவிப் பொறியாளர் | 1 | – |
| பணி மேற்பார்வையாளர் | 3 | 1 |
| மின் கண்காணிப்பாளர் | 1 | – |
| மின் பணியாளர் நிலை – 1 | 5 | 2 |
| மின் பணியாளர் நிலை – 2 | 5 | 1 |
| குழாய் ஆய்வாளர் | 4 | 1 |
| பைப் லைன் பிட்டர்கள் | 4 | – |
| பி.எப்.கிளீனர்கள் | 10 | 3 |
| தலைமை நீரேற்று நிலைய கிளீனர்கள் | 6 | 6 |
| தலைமை நீரேற்று நிலைய காவலர்கள் | 5 | 2 |
| லாரி ஓட்டுனர்கள் | 2 | – |
| லாரி கிளீனர்கள் | 2 | 1 |
| ஜீப் ஓட்டுனர்கள் | 1 | – |
| குழாய் திருப்புநர் | 14 | 5 |
| நீர் தேக்க தொட்டி காவலர் | 13 | 7 |
| குடிநீர் கணக்காளர் (மீட்டர் ரீடர்) | 3 | – |

| | | |
|---|---|---|
| சணப்பிரட்டி மேல்நிலைத்தொட்டி இயக்குபவர்கள் | 18 (தொகுப்பூதியம்) | 2 |

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வாங்கல் மற்றும் நெரூர் மற்றும் கட்டளை ஆகிய இடங்களில் காவேரி ஆற்றில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 147.00 இலட்சம் லிட்டர்கள் வழங்கப்பட்டு வருகிறது. நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குழாய் பராமரிப்பு பணிகள் ஒப்பந்தப்புள்ளி பெற்று செய்யப்படுகிறது.

ரூ.110.38 இலட்சம் மதிப்பீட்டில் நெரூர் காவேரி ஆற்றில் புதிய திட்டத்தின் மூலம் கூடுதலாக தண்ணீர் எடுக்க UIDSSMT திட்டத்தின்கீழ் இத்திட்டம் செயல்படுத்திட சட்டபூர்வமாக அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிவு பெற்று பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கரூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.68.40 கோடி மதிப்பீட்டில் நெரூரில் காவேரி ஆற்றில் ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KFW நிதியுதவியுடன் நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது.

கரூர் நகருக்கு தேவையான குடிநீர் காவிரி ஆற்றிலிருந்து எடுக்கப்பட்டு பிரதான குழாய்கள் மூலம் 48 நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் நகரில் உள்ள எல்லா இடங்களுக்கும் சீராக வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் நகரில் குடிநீர் விநியோகம் திருப்திகரமாக உள்ளது. மேற்படி திட்டம் ரூ.630.30 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியத்தினால் அரசு மற்றும் எல்.ஐ.சி.கடன் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்திற்காக 1) செங்குந்தபுரம், 2) வ.உ.சி.தெரு, 3) ஜெயபிரகாஷ் நடுநிலைப்பள்ளி, 4) பசுபதிபாளையம், 5) திருமாநிலையூர், 6) மடவிளாகம், 7) ஜவஹர் பஜார், 8) சிதம்பரம் மாணவர் விடுதி வளாகம் – 2 மேல்நிலைத் தொட்டிகள், 10) அண்ணா நகர், 11) இராமானூர் மேல்நிலைத்தொட்டிகள் உள்ளன. ஏற்கனவே உள்ள ஜவஹர் பஜார் தண்ணீர் தொட்டியுடன் இவற்றின் கொள்ளளவு 77 லட்சம் லிட்டர்களாகும்.

**கரூர் நகராட்சி பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு கீழ்க்கண்ட உயர்நிலை மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலமாக சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.**

| | | |
|---|---|---|
| 1 | ஜவஹர் பஜார் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | 6.00 லட்சம் லிட்டர் |

| | | |
|---|---|---|
| 2 | ஜவஹர் பஜார் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி | 9.00 லட்சம் லிட்டர் |
